**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1**
**RAMANATHAPURAM**
**CASE NO: CC.146/2018**
**Deposition of witness for prosecution –PW-3**

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி. சசிகலா |
| Father Name | : | திரு. தொண்டியப்பன் |
| Village | : | |
| Taluk | : | தொண்டி |
| District | : | இராமநாதபுரம் |
| Caste | : | |
| Calling | : | களஅலுவலர் (மண்டபம்) |
| Religion | : | |
| Age | : | 37 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the 20th day of August 2024.

**முதல் விசாரணை:**

நான் இராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் வட்டாரத்தில் கள அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். 04.03.2017 முதல் 15.06.2018 வரை நான் இராமநாதபுரம் மாவட்ட துணைப்பதிவாளர் அலுவலகத்தில் கூட்டுறவு சார்பதிவாளர்/கண்காணிப்பாளர் 1 ஆக பணியில் இருந்த போது இராமநாதபுரம் மாவட்ட வணிக குற்றப்புலனாய்வு போலீசார் அரசூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தின் நடந்த முறைகேடு சம்பந்தமான விசாரணை அதிகாரி விசாரணையின் போது கைப்பற்றப்பட்ட ஆவணங்களை நேரில் வந்து கேட்டதன் அடிப்படையில் ஆவணங்களை ஒப்படைத்தேன். போலீசார் என்னை விசாரணை மேற்கொண்டார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

என்னென்ன ஆவணங்கள் கொடுக்கப்பட்டது என்பது குறித்து விசாரணை அதிகாரியிடம் இருந்து குறிப்பு எழுதி கையெழுத்து வாங்கிக் கொண்டேன். நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் ஆவணங்கள் ஒப்படைக்கப்படவில்லை என்றால் சரியல்ல.

(ஒப்பம்/– N. நிலவேஸ்வரன்)
நீதித்துறை நடுவர் எண்.1,
இராமநாதபுரம்.

# DEPOSITION OF WITNESS
# (Chapter XX III Code of Criminal Procedure)
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1
# RAMANATHAPURAM
# CASE NO: CC.146/2018
# Deposition of witness for prosecution –PW–2

| | | |
|---|---|---|
| Name | : | திரு. பாலகிருஷ்ணன் |
| Father Name | : | திரு. ஆதியப்பன் |
| Village | : | |
| Taluk | : | கோவில்பட்டி |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | துணைப்பதிவாளர் (ஓய்வு) |
| Religion | : | |
| Age | : | 61 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the 20th day of August 2024.

## முதல் விசாரணை:

நான் கோவில்பட்டியில் கூட்டுறவு சங்கங்களின் துணைப்பதிவாளராக பணிபுரிந்து பணிஓய்வு பெற்று தற்போது கோவில்பட்டியில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரி அரசூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தின் முதுநிலை எழுத்தராக பணிபுரிந்து வந்தார். கடந்த 21.11.2016 முதல் 31.12.2017 வரை இராமநாதபுரம் சரக கூட்டுறவு சங்கங்களின் துணைப்பதிவாளராக பணியில் இருந்த போது எனக்கு முன்னால் பணியில் இருந்த திரு.செண்பகராஜ் துணைப்பதிவாளர் அவர்கள் அரசூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் நடந்த முறைகேடு சம்பந்தமாக பிரிவு 81 விசாரணை அதிகாரியாக அருணகிரி சார்பதிவாளர்/களஅலுவலர் அவர்களின் நியமனம் செய்திருந்தார். விசாரணை அதிகாரி தனது விசாரணையை தொடங்கி முடித்து விசாரணை அறிக்கையை சமர்ப்பித்திருந்தார். நான் மேற்படி முறைகேடு சம்பந்தமான ஆவணங்களை பார்வையிட்டு கடந்த 18.09.2017 ம் தேதி வணிக குற்ற புலனாய்வு பிரிவு காவல் துறை கண்காணிப்பாளர் சென்னை அவர்களுக்கு புகார் மனு அனுப்பினேன். **என்னால் காட்டப்படும் புகார் மனு அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. எனது புகாரில் அரசூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் குற்ற

நடவடிக்கைகளில் நேரடி தொடர்புடைய குற்றம் சாட்டப்பட்டவர் புரிந்துள்ள முறைகேடுகள் காரணமாக சங்க நற்பெயருக்கு களங்கம் ஏற்பட்டுள்ளது. அதற்கு காரணமாக சங்க செயலாளராக பணிபுரிந்து செயலாளர் லிங்கப்பன், முதுநிலை எழுத்தர் எஸ்.பி.ராஜன் ஆகிய இருவர் மீதும் குற்ற நடவடிக்கைக்கான புகார் மனு அளித்தேன். இது சம்பந்தமாக போலீசர் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் இந்த வழக்கில் முறையாக ஆவணங்களை விசாரணை செய்யாமல் புகார் மனு அளித்தேன் என்றால் சரியல்ல.

(ஒப்பம்/– N. நிலவேஸ்வரன்)
நீதித்துறை நடுவர் எண்.1,
இராமநாதபுரம்.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1**
**RAMANATHAPURAM**
**CASE NO: CC.146/2018**
**Deposition of witness for prosecution –PW–1**

| | | |
|---|---|---|
| Name | : | திரு. K. செண்பகராஜ் |
| Father Name | : | திரு. கந்தப்பன் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | மதுரை |
| Caste | : | |
| Calling | : | துணைப்பதிவாளர்(ஓய்வு) |
| Religion | : | |
| Age | : | 65 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the 20th day of August 2024.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் கூட்டுறவு சங்கங்களின் துணைப்பதிவாளராக பழனியில் பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று தற்போது மதுரையில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரி முதுநிலை எழுத்தராக அரசூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் வேலை பார்த்தார். கடந்த 11.02.2015 முதல் 31.10.2016 வரை துணைப்பதிவாளராக இராமநாதபுரத்தில் பணியாற்றி வந்தேன். திருவாடனை வட்டாரத்தில் அரசூர் தொடக்க கூட்டுறவு வேளாண்மை சங்கத்தில் முறைகேடு நடைபெற்றதாக வரப்பெற்ற கூட்டுறவு சார்பதிவாளர்/களஅலுவலர் அருணகிரி அவர்களின் அறிக்கையின் அடிப்படையில் என்னால் சட்டப்பூர்வமான பிரிவு 81 ன் கீழான விசாரணைக்கு என்னால் ந.க.எண்.3245/2015/தொ.வே.கூ.நாள் :19.01.2016 ன் படி கூட்டுறவு சார்பதிவாளர்/களஅலுவலர் ஆர்.எஸ்.மங்கலம் அவர்களை சட்டப்பூர்வமான விசாரணை அலுவலராக நியமனம் செய்து என்னால் 19.01.2016 அன்று ஆணையிடப்பட்டது. **என்னிடம் காட்டப்படும் 19.01.2016 தேதியிட்ட ந.க.எண்.3245/2015/தொ.வே.கூ.நாள் :19.01.2016 ன் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. என்னிடம் காட்டப்படும் 06.11.2015 தேதியிட்ட அருணகிரி சார்பதிவாளர் /களஅலுவலர் அளித்த அறிக்கையை நான் பார்வையிட்டேன். விசாணை அதிகாரி 27.04.2016 ல் விசாரணையை முடித்து என்னிடம் விசாரணை

அறிக்கை அளித்தார். அதன்பின் நான் பணியில் இருந்து 31.10.2016 அன்று பணிமாறுதலாகி சென்றுவிட்டேன். இது சம்பந்தமாக போலீசார் என்னிடம் விசாரணை மேற்கொண்டார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

பிரிவி 81 விசாரணைக்கு நான் உத்தரவிடும் பட்சத்தில் முறைகேடு நடந்த சங்கத்தின் ஆவணங்கள் முழுவதும் பார்வையிட வேண்டுமா என்றால் பார்வையிட வேண்டியதில்லை. இந்த வழக்கில் சங்கத்தில் முறைகேடு சம்பந்தமாக இந்த வழக்கின் விசாரணை அதிகாரி தான் உங்களிடம் புகார் கூறியது என்றால் இல்லை அருணகிரி அவர்கன் தலைமையிலான குழு தான் எனக்கு அறிக்கை அளித்தாகும். சங்கத்தில் புகார் கொடுத்த நபரே விசாரணை அதிகாரியாக நியமிக்கக்கூடாது என்று சொன்னால் தவறு. புகார்தாரரான விசாரணை அதிகாரி இந்த வழக்கில் புகாரை பொறுத்த அளவில் Interested person என்று சொன்னால் தவறு. விசாரணை அதிகாரியான தலைமையிலான குழு அளித்த முதல்நிலை அறிக்கை நான் படித்துப்பார்த்தேன் என்றால் சரிதான். கூட்டுறவு வேளாண்மை சங்கத்தை பொறுத்தவரை செயலாளர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டிருந்தார் என்றால் எனக்கு தெரியாது. மேற்சொன்ன விசயம் முதல் நிலை விசாரணை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்ததா என்றால் ஆவணங்களை பார்த்தால் தான் தெரியும். முதல்நிலை விசாரணை அறிக்கை குழுவில் உள்ள 3 நபர்களும் வேளாண்மை தொடக்க சங்கத்தில் உள்ள ஆவணங்களை பார்வையிட்டார்களா என்றால் ஆவணங்களை முழுமையாக பார்வையிடவில்லை. எந்த ஆவணங்களை எல்லாம் பார்வையிடவில்லை என்று உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. முழுமையாக ஆவணங்களை பார்வையிடாமல் அதனுடைய அறுதிதன்மையை கூற முடியுமா என்றால் கூற முடியும். கூட்டுறவு சங்கத்தை பொறுத்தவரை பணியிடை நீக்கம் செய்யப்பட்ட செயலாளர் ஆவணங்கள் அனைத்தையும் எடுத்துச் சென்றுவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 19.01.2016 அன்றே திரு. அருணகிரி பெற்றுக்கொண்டார் என்பது குறித்து முதல்நிலை விசாரணையில் குறிப்பு உள்ளதா என்றால் தபால் மூலமாக அனுப்பப்பட்டுள்ளது. முதல்நிலை விசாரணை தொடங்கப்பட்ட தேதியில் 3 மாதங்களுக்குள் முடிக்கப்பட வேண்டும் என்றால் சரிதான். இந்த அறிக்கை 27.04.2016 அன்று விசாரணை அலுவலரால் கையெழுத்திட்டு சமர்ப்பிக்கப்பட்டது. அந்த அறிக்கை 3 மாதங்களுக்கு மேல் தான் சமர்ப்பிக்கப்பட்டது என்றால் தவறு ஏனென்றால் விசாரணை அதிகாரி விசாரணை அறிக்கையை 18.04.2016 அன்று முடித்துள்ளேன் என்று தனது விசாரணை அறிக்கையில் தெரிவித்துள்ளார். இந்த வழக்கில் 3 மாதத்திற்கு மேல் அறிக்கை கொடுக்கப்பட்டு காலதாமத்தை கருத்தில் கொண்டு பொய்யாக முடித்ததாக கூறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எவ்வித ஆவணங்களையும் பார்வையிடாமல் அருணகிரியின் வேண்டுகோளுக்கிணங்க பிரிவு 81 செயல்முறை ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

(ஒப்பம்/— N. நிலவேஸ்வரன்)
நீதித்துறை நடுவர் எண்.1,
இராமநாதபுரம்.